8th August 1966]

*223 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில் சர்க்கரை மீது உள்ள கட்டுப்பாடுகளை நீக்க மத்திய அரசாங்கத்திடமிருந்து, மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில் இது சம்பந்தமாக மாநில அரசாங்கத்தின் கொள்கை என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: சர்க்கரைக் கண்டிரோலை எடுத்து விட்டால் விலை குறைந்து விடும் என்ற நம்பிக்கை பொது ஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கிறது. அப்படி இருக்கும் போது அரசாங்கம் இதை ஏன் கட்டிக் கொண்டு அழ வேண்டும்?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

கனம் சபாநாயகர் : உங்கள் கேள்வியை திருப்பிச் சொல்லுங்கள், சரியாகக் கேட்கவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்தச் சர்க்கரைக் கட்டுப்பாட்டை எடுத்து விட்டால் விலை குறையும் என்று பொது ஜனங்களும், என்னைப் போன்ற மெம்பர்களும் கருதுகிறார்கள். அப்படியிருக்கும் போது அரசாங்கம் எதற்காக இதைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் ?

கனம் சபாநாயகர் : கட்டிக் கொண்டு அழுகிறார்களா ?

THE HON. Minister need not answer this question.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இப்போது எல்லா ஆலைகளிலும் சர்க்கரை தேங்கி கிடக்கின்றன. குறிப்பாக, எங்கள் பகுதியில் முள்ளிப்பாளையத்தில் விவசாயிகள் ஆலைக்குக் கொடுக்கிற கரும்புக்கான பணத்தை சர்க்கரையை விற்றுத்தான் கொடுக்க முடியும்; 80,000 மூட்டைக்கு மேல் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்லி விவசாயிகளுக்கான தொகை கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த கண்ட்ரோலை எடுத்துவிட்டால் பொதுமக்களுக்குத் தாராளமாகச் சர்க்கரை கிடைக்க வழி ஏற்படுவதோடு விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும் என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதைப் பற்றிய விதி முறைகளைக் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்திருந்தால் இந்தக் கேள்வியை பார்லிமெண்டில்தான் போட்டிருக்கவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அடுத்த வருஷம் போடுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அப்படியானால் அடுத்த வருஷம் பதில் சொல்வார்கள்.

[8th August 1966

கனம் சபாநாயகர் : அப்படியானால், இரண்டு பேரும் அடுத்த வருஷம் பார்லிமெண்டுக்குப் போகிறீர்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அடுத்த வருஷம் பதில் 'சொல்வார்கள்' என்று தான் சொன்னேன்.

புஞ்சை நிலங்களை நஞ்சையாக மாற்றம்

*224 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டுள்ள புஞ்சை, ஒரு போக நஞ்சை நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றி லோக்கலைஸ் செய்யும் திட்டம் எப்பொழுது பூர்த்தியாகும் ?

The Hon. Sri V. RAMAIAH : There is no such scheme. In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got power to effect the change of classification.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் புஞ்சையாக இருந்து நஞ்சையாகப் பயிராகிக் கொண்டிருக்கிற நிலம் எவ்வளவு? தண்டத் தீர்வை விதிக்கப் பட்டுள்ளதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு ? அமைச்சர் அவர்கள் கால்வாய்கள் புனரமைப்பு முடிந்தவுடன் லோகலைஸ் செய்யப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். இவை எப்போது பூர்த்தி செய்யப்படும்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த ஜில்லாவைப் பொறுத்த மட்டில் புள்ளிவிவரம் இல்லை.

In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got the powers to effect the change of classification.

என்ற முறையில் அவர் கேட்கக்கூடிய தகவல்படி கலெக்டர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் பிசான காலத்தில் புஞ்சை நிலங்களில் பயிர் செய்யப்பட்டிருந்தால் இரண்டு ரேட் தண்ணீர்த் தீர்வை கட்ட வேண்டும். கார் காலத்திலும் அட்வான்ஸ் கார் காலத்திலும் ஒரு ரேட் தீர்வைத்தான். பிசான காலப் பயிருக்கும் கார்காலப் பயிரைப் போல ஒரு ரேட் தீர்வை வசூல் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்பெசிபிக்காக திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் ஒரு கேள்வியைப் போட்டால் பதில் சொல்ல முடியும்.